*கவனிக்க.- 2024.11.08 ஆந் திகதிய 2410 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2413 - 2024 නොවැම්බර් මස 29 වැනි සිකුරාදා - 2024.11.29

*2413 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 29 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 2288 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலூன பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2024, திசெம்பர் மாதம் 20 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2024, திசெம்பர் மாதம் 06 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரனியல் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2024, ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

2285-B 82631-5,441 (2024/11)

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிற பதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான “புதிய சேர்வாளர்கள்” ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரசாங்க சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலுவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்க வேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுரத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரசாங்க சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரசாங்க சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரசாங்க சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த) தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரசாங்க சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிச் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரசாங்க சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரசாங்க சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரசாங்க சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவு செய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமையபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகளுக்கான விதிகளும் அறிவுறுத்தல்களும்

1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் காலத்துக்குக்காலம் வெளியிடப்படுகின்ற சட்டங்களுக்கும் ஒழுங்குமுறைகளுக்கும் ஏற்ப ஒழுகுவதற்கு சகல பரீட்சார்த்திகளும் கட்டுப்பட்டவர்களாவர்.

1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கத் திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் 20 ஆம் வாசகத்தின் மூலம் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்துக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய கீழ்க் குறிப்பிடப்படும் நிபந்தனைகள் மற்றும் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன.

அனைத்துப் பரீட்சார்த்திகளும், கீழ்க் குறிப்பிடப்படும் விதிகளுக்கு கட்டுப்பட வேண்டும் என்பதுடன் இவ் விதிகளில் எவற்றையேனும் மீறும் பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் தீர்மானத்துக்கு அமைய கீழ்க் குறிப்பிடப்படும் தண்டனைகளில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட தண்டனைகளுக்கு உட்படுத்தப்படுவார்.

I. விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்ற முழுப் பரீட்சைக்கும் அல்லது அதன் ஒரு பகுதிக்கு தோற்றுவதற்குத் தடை விதித்தல்;

II. விசாரணைக்கு உட்படுத்தப்படும் பரீட்சையின் ஒரு பாடத்திற்கு அல்லது மொத்தப் பரீட்சைக்கும் தகுதியற்றவர் ஆக்குதல்;

III. இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் நடாத்தப்படுகின்ற அனைத்துப் பரீட்சைகளுக்கும் தோற்றுவதற்கு வாழ்நாள் தடை விதித்தல்;

IV. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற பரீட்சைகளில் தோற்றுவதற்குத் தடை விதித்தல்;

V. இடைநிறுத்தப்பட்ட, பரீட்சைக்கான தடை உடன் கடிதம் ஒன்றை வழங்குதல்;

VI. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு சான்றிதழ் தடை செய்யப்படல்;

VII. பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் கீழ் குற்றவியல் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்வதற்காக பரீட்சார்த்தியை காவற்றுறையிடம் ஒப்படைத்தல் அல்லது அக்குறித்த செயற்பாடு தொடர்பாக காவற்றுறையில் புகார் செய்தல்;

VIII. பரீட்சார்த்தி அரசாங்க ஊழியராக அமையும் சந்தர்ப்பத்தில் குறித்த பரீட்சார்த்தியின் செயற்பாடு தொடர்பாக (ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக) குறித்த பரீட்சார்த்தியின் நியமன அதிகாரிக்கு அறிவித்தல்.

பரீட்சைக்கு முன்பு, பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது அல்லது பரீட்சைக்கு பின்பு அல்லது வேறு எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் அவ்வாறான பரீட்சார்த்தி தொடர்பாக நடவடிக்கை எடுக்கும் அதிகாரத்தை பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், தம்வசம் கொண்டவர் ஆவார். இது தொடர்பாக அவரால் மேற்கொள்ளப்படும் தீர்மானம் இறுதியானதாகும்.

1. சகல பரீட்சார்த்திகளும் பரீட்சை மண்டபத்தினுள் மற்றும் பரீட்சை நடைபெறும் வளாகத்தினுள் பரீட்சை மேற்பார்வையாளருக்கு அவரது பணிக் குழாமுக்கு, அதே போன்று ஏனைய பரீட்சார்த்திகளுக்கு இடையூறு அல்லது தடங்கல்கள் ஏற்படாத வகையில் நடந்துகொள்ள வேண்டும். பரீட்சார்த்திகள் பரீட்சை வளாகத்தின் சொத்துகளுக்கு அல்லது பரீட்சை ஊழியர்களின் தனிப்பட்ட சொத்துகளுக்கு சேதம் ஏற்படுத்துதல் கூடாது.

2. பரீட்சார்த்திகள் பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் காலப் பகுதியிலும் பரீட்சை ஆரம்பிப்பதற்கு முன்பும் அதே போன்று பரீட்சை நடைபெற்று முடிவடைந்தவுடனும் பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழுவின் அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப நடந்து கொள்ளல் வேண்டும்.

3. பரீட்சையின் போது வினாப்பத்திரத்திற்கு விடையளிப்பது ஆரம்பிக்கப்பட்டு அரை மணித்தியாலம் கழிந்த பின்னர் எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திற்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் பரீட்சை முடிவடையும் வரை எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கும் இடமளிக்கப்பட மாட்டாது. செயன்முறைப் பரீட்சைகள் அல்லது வாய்மொழி மூலமான பரீட்சைகளுக்கு உரிய நேரத்திற்கு சமுகம் அளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

4. சகல பரீட்சார்த்திகளும் தமது சுட்டெண்ணுக்குரிய ஆசனம் தவிர்ந்த வேறு எந்த இடத்திலும் அமர்தல் கூடாது. பரீட்சை மேற்பார்வையாளரின் விசேட அனுமதி இன்றி தன்னுடைய இடத்தை மாற்றக் கூடாது. தனக்கு ஒதுக்கப்பட்ட ஆசனத்தைத் தவிர வேறு இடத்தில் அமர்தல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்பட நேரிடும்.

5. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி பேணப்பட வேண்டும். எக் காரணம் கொண்டும் பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சை மேற்பார்வை பணிக்குழுவில் உள்ள ஒருவரைத் தவிர பரீட்சை மண்டபத்தினுள் அல்லது வெளியே இருக்கும் எவர் ஒருவருடனும் எந்தவித காரணத்திற்காகவும் கதைத்தல் அல்லது தகவல் பரிமாறல் அல்லது வேறு எந்தவிதமான கொடுக்கல் வாங்கலிலும் ஈடுபடுதல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.

6. பரீட்சை சுட்டெண்ணை மட்டும் கொண்டே பரீட்சார்த்தியின் விடைத்தாள்கள் இனங்காணப்படுகின்றமையால் விடைத்தாளில் தன்னுடைய பெயரை எழுதுதல், விடைத்தாளை இனங்கண்டு கொள்ளக்கூடிய வகையில் ஏதேனும் குறியீடு அல்லது குறிப்பு இடுதல், விடைத்தாளில் அநாகரிகமான அல்லது அவசியமற்ற விடயங்களை எழுதுதல், விடைத்தாளுடன் நாணயத்தாள்களை இணைத்தல் ஆகியவை முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளன. மேலும் வேறு எவரேனும் பரீட்சார்த்தியின் சுட்டெண்ணை தன்னுடைய விடைத்தாளில் எழுதுதலும் மோசடி நடவடிக்கை ஒன்றைச் செய்வதற்கு முயன்றதாகக் கருதப்படும். இனங்கண்டு கொள்ள முடியாத வகையில் சுட்டெண் எழுதப்பட்ட விடைத்தாள்களும் நிராகரிக்கப்படும்;

7. உமக்கு பரீட்சை மண்டபத்தினுள் வழங்கப்படும் தாள்கள் (பரீட்சை நடைபெறும் திகதிக்குரிய நோக்குனரின் குறுகிய கையொப்பம் மற்றும் திகதி இடப்பட்ட விடை எழுதும் தாள்கள்) தவிர வினாத்தாளிலோ அல்லது மேசையிலோ அல்லது வேறு ஏதேனும் இடத்திலோ எவற்றையும் எழுதுதல் கூடாது. இந்த அறிவுறுத்தல்களுக்கு மாறாக செயற்படுதல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்படும்.

8. பரீட்சார்த்திக்கு வழங்கப்படுகின்ற தாள்களை அல்லது விடை எழுதும் புத்தகத்தை கிழித்தல் அல்லது கசக்குதல் கூடாது. பரும்படி வேலைகளை செய்து பார்ப்பதற்காக உபயோகிக்கும் சகல தாள்களையும் தெளிவாக குறுக்காக கோடிட்டு விடைத்தாளுடன் இணைத்தல் அல்லது விடைத்தாளுடன் கையளித்தல் அல்லது வழங்கப்படுகின்ற அறிவுறுத்தலின் படி செய்தல் வேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதப்பட்ட எதனையும் வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. ஒரே வினாவிற்கான விடை இரு இடங்களில் எழுதப்பட்டிருப்பின் அவசியமற்ற விடையைத் தெளிவாக வெட்டி விட வேண்டும்.

9. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக உமக்கு வழங்கப்படுகின்ற தாள்கள் மற்றும் வேறு பொருட்களை பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. இவ்வாறான அனைத்துப் பொருட்களும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு சொந்தமானதுடன் இவ் விதியினை மீறுதல் ஒரு தண்டனைக்குரிய செயற்பாடாகக் கருதப்படும்.

10. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக தனக்கு வழங்கப்படுகின்ற காகிதாதிகள் ஒவ்வொரு பரீட்சையின் போதும் தனக்கருகே வைத்துக் கொள்ளக்கூடிய எழுத்து மூலமான அனுமதியுள்ள பொருட்கள் தவிர்ந்த ஏனைய குறிப்புப் புத்தகங்கள், குறிப்புகள் உள்ளடங்கிய தாள்கள் அல்லது கடதாசித்துண்டுகள் போன்றவை பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சைக்குத் தோற்றும் சந்தர்ப்பத்தில் தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் கூடாது. அது போன்றே பரீட்சை மண்டபத்தினுள் கையடக்கத் தொலைபேசி, இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் (Electronic Communication Instruments/ Devices) தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் மற்றும் அந்த சாதனங்கள்/கருவிகளை உபயோகித்து வெளி நபர்களின் உதவிகளைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் பரீட்சை நடைபெறும் போது வேறு நபர்களுக்கு மற்றும் சமூக ஊடகங்களுக்கு தகவல் அனுப்புதல் மோசடிச் செயற்பாடு என்பதுடன் தண்டனைக்குரிய குற்றமாகும்.

11. இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் மேற்குறிப்பிட்ட 10ஆவது பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள செயற்பாடுகள் தொடர்பாக உபயோகிக்கப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டால் அச் சாதனங்கள்/கருவிகள் உரிய விசாரணை நடவடிக்கைகள் முடிவடையும் வரை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வசம் எடுக்கப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

12. பரீட்சை மண்டபத்தில் அமர்ந்த பின்னர், பரீட்சைக்கு முன் அல்லது பரீட்சை நடைபெறும் சந்தர்ப்பத்தில் எந்தவொரு பரீட்சார்த்தியும் தன் அருகே பரீட்சைக்காக கொண்டு வருவதற்கு அனுமதிக்கப்படாத எந்தவொரு பொருளையும் அல்லது உபகரணத்தையும் வைத்திருத்தல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழாம் கட்டளையிட்டால் சகல பரீட்சார்த்திகளும் தன் வசம் உள்ளவற்றை வெளிப்படுத்துவதற்கும் மற்றும் பரிசோதிப்பதற்கும் கட்டுப்படுவதுடன் இவ்வாறான தேவைப்பாட்டினை மீறுவது மோசடியான செயற்பாட்டை செய்வதற்கு முயற்சித்ததாகக் கருதப்படும்.

13. எவரேனும் ஒரு பரீட்சார்த்தி வேறு ஒரு பரீட்சார்த்தியின் விடைத்தாளிலிருந்து அல்லது புத்தகத்திலிருந்து அல்லது தாளிலிருந்து அல்லது குறிப்பெழுதிய தாள்களிலிருந்து அல்லது சமிக்ஞைகள் மூலம் அல்லது வேறு ஏதேனும் ஒன்றிலிருந்து பார்த்து எழுதுதல் அல்லது பார்த்து எழுத முயற்சித்தல் அல்லது மோசடியாக நடந்து கொள்ளல் என்பன குற்றமாகும். வேறு பரீட்சார்த்திக்கு உதவி செய்தல், வேறு பரீட்சார்த்தியிடமிருந்து அல்லது நபரிடமிருந்து அல்லது பரீட்சை பணிக் குழுவினரிடமிருந்து உதவி பெறுதல் குற்றம் என்பதுடன் விடையளித்து முடிந்த சகல தாள்களையும் எழுதிக் கொண்டிருக்கும் தாளுக்குக் கீழே வைத்து விடையளித்தல் வேண்டும். எழுதுகின்ற தாள்களை மேசையின் மேல் பரப்பி வைத்திருத்தல் கூடாது.

14. பரீட்சை ஆரம்பிக்கப்பட்டு வினாத்தாளுக்கு விடையளிக்கும் போது எக்காரணம் கொண்டும் குறுகிய நேரத்திற்குக் கூட பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கு எந்தவொரு பரீட்சார்த்திக்கும் இடமளிக்கப்பட மாட்டாது. எனினும், ஒரு பரீட்சார்த்திக்கு மலசலகூடத்திற்கு செல்வதற்காக பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டால் பரீட்சை மேற்பார்வையாளரின் உதவி பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரின் கண்காணிப்பின் கீழ் பரீட்சார்த்திக்கு சிறிது நேரம் வெளியே செல்வதற்கு அனுமதிக்கப்படுவார். அவ்வாறு வெளியே செல்லும் முன்பும், மீண்டும் பரீட்சை மண்டபத்திற்குள் வரும் போதும் அவர் சோதனைக்கு உட்படுத்தப்படல் வேண்டும்.

15. பரீட்சை மண்டபத்தில் விடையளிக்கத் தொடங்குவதற்கு முன் அல்லது பின் உரிய பரீட்சார்த்திக்குப் பதிலாக போலிப் பரீட்சார்த்தி ஒருவர் தோற்றுதல் தண்டனைக்கு உள்ளாகக்கூடிய செயற்பாடாகும். ஆளடையாள அட்டையை மாற்றுதல் அல்லது போலி அடையாள அட்டையைச் சமர்ப்பித்தல் ஒரு மோசடிச் செயற்பாடாகக் கருதப்படும்.

16. பரீட்சார்த்தி ஒருவர் அல்லது பரீட்சார்த்தி அல்லாத ஒருவர் எந்தவொரு பரீட்சார்த்திக்கும் தவறான முறையில், மோசடி செய்யும் வகையில் உதவி செய்தல் ஒரு பாரிய குற்றமாக கருதப்படும்.

17. பரீட்சார்த்தி ஒருவர் கீழ்க் குறிப்பிடப்படும் அறிவுறுத்தல்களுக்கமைய செயற்படல் வேண்டும்:

(i) சகல பரீட்சார்த்திகளும் தனது அனுமதிப்பத்திரத்தில் கையொப்பத்தினை உறுதி செய்து கொள்வதும், விண்ணப்பிக்கப்பட்ட பாடங்கள் மற்றும் அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள பாடங்களுக்கிடையில் பொருந்தாத தன்மை காணப்படின் பரீட்சைத் திணைக்களத்தில் விசாரித்து பரீட்சைக்கு முன் அதைத் திருத்திக் கொள்வதும் மேற்கொள்ளப்பட வேண்டும்;

(ii) பரீட்சை ஆரம்பிப்பதற்கு அரை (1/2) மணித்தியாலத்திற்கு முன்னர் பரீட்சை மண்டபத்திற்கு சமுகமளித்தல் உசிதமானது என்பதுடன், பரீட்சை மண்டபம் நிச்சயமாகத் தெரியாதவிடத்து பரீட்சை ஆரம்பிக்கும் தினத்திற்கு முன்னரே அது குறித்து விசாரித்து பரீட்சை மண்டபத்தை சரியாக இனங்காணல் சிறந்தது;

(iii) பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி ஒவ்வொரு பாடங்களுக்குத் தோற்றும் போதும் தனது ஆள் அடையாள அட்டையை வழங்கி தனது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

(a) ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்தில் சமர்ப்பிக்காவிடின், பரீட்சார்த்தியாய் இருத்தல் இரத்துச் செய்யப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், ஏதேனும் காரணத்தால் அதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்திற்கு கொண்டு வர மறந்திருப்பின் அதனைப் பற்றி பரீட்சை மேற்பார்வையாளருக்கு அறிவித்து பரீட்சை முடிவடைவதற்கு முன்னர் அவற்றைச் சமர்ப்பிப்பதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

(b) சகல பரீட்சார்த்திகளும் தனது ஆள் அடையாளம் தெளிவாக வெளிப்படுத்தும் வகையில், முழு முகத்தையும் நன்றாக அடையாளம் காணக்கூடிய வகையில் பரீட்சை நடைபெறும் கால எல்லையில் பரீட்சை மண்டபத்தில் இருக்க வேண்டும்.

(iv) பரீட்சார்த்தி புளூடூத் (Bluetooth) போன்ற இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகளை (Electronic Communication Devices) உபயோகிக்கவில்லை என்பதனை உறுதி செய்து கொள்வதற்காக பரீட்சை மண்டபத்தில் தனது இரு காதுகளையும் தெளிவாகத் தெரியும் வகையில் வைத்திருத்தல் வேண்டும்;

(v) பரீட்சை மண்டபத்தில் உமக்கு வழங்கப்படுகின்ற தாள்களை விடுத்து வேறு எவ்வித கடதாசிகளையும் விடையளிப்பதற்கு உபயோகிக்கக் கூடாது. எஞ்சிய கடதாசிகளை மற்றும் வேறு பொருட்களை அசுத்தப்படுத்தாது மீண்டும் உபயோகிக்கக்கூடிய வகையில் உமது மேசையின் மேல் வைக்க வேண்டும்;

(vi) பரீட்சார்த்திகள் தங்களது பேனா, பென்சில், அழிறப்பர், அடிமட்டம், கேத்திரகணித உபகரணங்கள், வர்ணப் பென்சில் பெட்டி, வர்ண சோக் பெட்டி போன்றவற்றைக் கொண்டு வருதல் வேண்டும்;

(vii) நீங்கள் உபயோகிக்கும் விடையளிக்கும் புத்தகம் மற்றும் சகல தாள்களிலும் விடையெழுத தொடங்கும் போது உடனடியாக சுட்டெண்ணைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். விடைத்தாள்களின் இருபுறமும் தெளிவாக, சுத்தமாக விடையெழுத வேண்டும். வினாவொன்றின் ஒரு பகுதிக்கு விடையெழுதிய பின் அவ் வினாவின் மற்றைய பகுதியை ஆரம்பிப்பதற்கு முன் ஒரு வரியையாவது வெறுமையாக விடுதல் வேண்டும். ஒவ்வொரு வினாக்களுக்குமான விடையினைப் புதிய பக்கத்தில் ஆரம்பித்தல் வேண்டும்;

(viii) விடையளிக்கும் தாளின் இடதுபுற விளிம்புக்கோடு காணப்படுவது வினாக்களின் இலக்கங்களை எழுதுவதற்காகும். வலதுபுற விளிம்புக்கோடு ஒதுக்கப்பட்டிருப்பது மதிப்பிடுபவரின் உபயோகத்திற்காகும். அதனால் அவற்றில் எதுவும் எழுதுதலாகாது. உம்மால் விடையளிக்கப்பட்ட வினாக்களின் இலக்கங்களைப் பிழையாக இடுவது குழப்பத்திற்குக் காரணமாக அமையும் என்பதனால் வினா இலக்கத்தைச் சரியாக எழுதுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்;

(ix) கணித வினாக்களுக்கு விடையளிக்கும் போது கணக்குச் செய்முறைகள் பார்த்த மற்றும் பரும்படி வேலைகள் அந்தந்த ஒழுங்கில் கணக்கிற்கான விடையைக் கண்டு பிடித்ததன் ஒரு பகுதியாகக் காட்டப்பட வேண்டும். அவசியமான இடங்களில் வரையப்படும் வரிப்படங்கள் மற்றும் படங்கள் சரியானவையாகவும் குறிப்பிடத்தக்க அளவு பெரிதானதாகவும் இருத்தல் வேண்டும்;

(x) கட்டாயமான வினா மற்றும் தெரிவு செய்யப்பட வேண்டிய ஏனைய வினாக்கள் தொடர்பாக வினாப்பத்திரத்தில் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்தல் வேண்டும். வினாப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப விடையளிக்கப்படாத சந்தர்ப்பங்களில் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது;

(xi) ஒவ்வொரு வினாவிற்கும் விடையளித்து முடிந்த பின் விடையளித்த புத்தகத்திற்கு மேலதிகமாக எழுதிய தாள்களை பக்க இலக்கங்களின் ஒழுங்கில் இணைத்து இடதுபுற மேல்மூலையில் கழறாத வகையில் கட்டுதல்/இணைத்தல் வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளிக்கும் முன் சகல விடைத்தாள்களும் இணைக்கப்பட்டுள்ளனவா என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளித்த பின் பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லப்பட்ட எந்தவொரு விடை எழுதிய தாளும் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட மாட்டாது;

(xii) உங்கள் விடைத்தாளை பரீட்சை மேற்பார்வையாளரிடம் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரிடம் கையளித்தல் வேண்டும். விடைப்பத்திரங்களை சேகரிக்கும் வரை உங்களது ஆசனத்தில் அமர்ந்திருத்தல் வேண்டும். அவ்வாறு செய்வதற்குத் தவறுவதானது, சிலவேளை உமது விடைப்பத்திரம் காணாமல் போவதற்கும் நீர் ஏதாவது பாடத்திற்கு சமுகமளிக்கவில்லை என்று கருதுவதற்கும் காரணமாக அமையும்;

(xiii) ஏதாவது காரணத்துக்காக பரீட்சை மேற்பார்வையாளருடன் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவருடன் கதைக்க வேண்டிய அவசியம் ஏற்படின், ஏனையவர்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் மேசையில் இருமுறை தட்டுவதன் மூலம் சமிக்ஞை செய்தல் வேண்டும்.

பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்.

இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## சட்டவரைஞர் திணைக்களம்

*சட்டவரைஞர் திணைக்களத்தின் வகுதி 2 தொழில்நுட்பம் சாரா முகாமைத்துவ உதவியாளருக்கான பதிப்பாசிரியர் தரம் III மற்றும் ஆவணப்படுத்தல் உதிவியாளர் தரம் III ஆகிய பதவிகளிலான வெற்றிடங்களை நிரப்புவதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2024*

மேலேயுள்ள தலைப்பின் கீழ் 2022.04.01 ஆந் திகதிய வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் விண்ணப்பங்களைக் கோரியதுமான அறிவித்தலுடன் மேலதிகமாக இவ்வாத்தமானி அறிவித்தல் வெளியிடப்படுகின்றது.

அத்தகைய அறிவித்தலின் நியதிகளின்படி மேற்குறிப்பிடப்பட்ட பதவிகளுக்கான விண்ணப்பங்களைச் சமர்ப்பித்த பரீட்சார்த்திகள் தமது விண்ணப்பங்களை மீண்டும் சமர்ப்பிப்பதற்குத் தேவைப்படுத்தப்படமாட்டார்கள்.

2022.04.01ஆந் திகதிய வர்த்தமானிக்கிணங்கத் தமது விண்ணப்பங்களைச் சமர்ப்பித்த பரீட்சார்திகளுக்கும் இவ் வர்த்தமானிக்கிணங்கத் தமது விண்ணப்பங்களைச் சமர்ப்பித்த பரீட்சார்த்திகளுக்கும் பரீட்சையானது 2025, பெப்புருவரி மாதம் கொழும்பில் நடைபெறும் பரீட்சைத் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

சட்டவரைஞர் திணைக்களத்தில் பதிப்பாசிரியர் தரம் III ஆகிய பதவிக்கான மற்றும் ஆவணப்படுத்தல் உதவியாளர் தரம் III ஆகிய பதவிக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்குத் தகைமைபெற்ற ஆளணியினரைத் தெரிவுசெய்வதற்கான போட்டிப் பரீட்சைக்காகத் தகவுடைய இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தேவையான தகைமைகளைப் பூர்த்திசெய்திருக்கின்ற விண்ணப்பகாரர்கள், சட்டவரைஞர் திணைக்களத்தின் சார்பில் இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தினால் நடாத்தப்படும் எழுத்துப் பரீட்சையின் பெறுபேறுகளுக்கு இணங்க, பதிப்பாசிரியர் தரம் III மற்றும் ஆவணப்படுத்தல் உதவியாளர் தரம் III ஆகிய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்குத் தெரிவுசெய்யப்படுவர்.

01. **தொழில் நிபந்தனைகள்** :

1.1 இப்பதவிகள் நிரந்தரமானவையும் ஓய்வூதியத்துக்குரித்துடையவையுமாக உள்ளதுடன் விதவைகள்/ விதுரர்கள் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய நிதியத்துக்கு உதவுதொகைகள் செலுத்தப்படுதலும் வேண்டும், அத்துடன் நியமிக்கப்பட்டவர்கள், ஓய்வூதியத் திட்டம் தொடர்பில் அரசாங்கத்தினால் காலத்துக்குக் காலம் செய்யப்படும் கொள்கைரீதியான முடிபுகளுக்கு அமைந்தோராதலும் வேண்டும்.

1.2 இப்பதவிக்கு நியமிக்கப்படும் அலுவலர்கள் மூன்று (03) வருட தகுதிகாண் காலப்பகுதிக்கு அமைந்தோராதல் வேண்டும்.

1.3 அரசாங்க நிருவாக சுற்றறிக்கை இல. 18/2020 இன்படி விண்ணப்பகாரர்கள் பதவிக்கு ஆட்சேர்க்கப்பட்டதிலிருந்து 03 வருடத்தினுள் விதித்துரைக்கப்பட்ட அரச கருமமொழியில் /மொழிகளில் தேர்ச்சி பெறுதல் வேண்டும்.

1.4 இந்நியமனமானது பகிரங்க சேவை ஆணைக்குழுவின் நடவடிக்கைமுறைசார் விதிகள், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனக் கோவை, அரசாங்கத்தின் நிதி ஒழுங்குவிதிகள் மற்றும் வேறு திணைக்கள ஒழுங்குவிதிகளுக்கு அமைந்ததாகும்.

1.5 பதவிக்குரிய கடமைகளை இயைபான திகதியில் பொறுப்பேற்கத் தவறுகின்ற அத்துடன் / அல்லது மறுக்கின்ற அல்லது தவிர்க்கின்ற விண்ணப்பகாரர்களின் நியமனமானது இரத்துச் செய்யப்படலாம்.

02. **சம்பள அளவுத் திட்டம்** : அரசாங்க நிருவாக சுற்றறிக்கை இல. 03/ 2016 இன் நியதிகளின்படி இப்பதவியின் மாதாந்த சம்பள அளவுத்திட்டம் (MNI -2016) ரூபா 29,140 - 10 x 300-11 x 350 - 10 x 495-10 x 660- 45, 540 ஆகும்.

03. **தகைமைகள்/ அனுபவம்** : ஒவ்வொரு விண்ணப்பகாரரும் விண்ணப்பங்கள் முடிவுறும் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னராகவோ இயைபான பதவி தொடர்பிலான அனைத்துத் தகைமைகளையும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

3.1. **கல்வித் தகைமைகள்** :

(அ) க.பொ.த. (சாதராண தர) பரீட்சையில் ஒரே தடவையில் கணிதம் மற்றும் சிங்களம் /தமிழ்/ஆங்கில மொழி ஆகிய பாடங்கள் உள்ளடங்களாக ஆகக் குறைந்தது நான்கு (04) பாடங்களிலேனும் திறமைச் சித்திகளுடன் ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல்,

அத்துடன்,

(ஆ) க.பொ.த. ( உயர்தர) பரீட்சையில் சிங்கள மொழி அல்லது தமிழ் மொழி அல்லது ஆங்கில மொழியில் ஆகக் குறைந்தது ஒரு திறமைச்சித்தியேனும் பெற்றிருத்தல் வேண்டும்.

**குறிப்பு**:

(i) விண்ணப்பகாரர் விண்ணப்பித்த மொழிமூலத்துடன் இயைபான மொழிப் பாடங்களுக்கான தகைமைகளை க.பொ.த ( சாதாரண தரத்தில் ) மற்றும் க.பொ.த. ( உயர்தரத்தில், பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

(ii) க.பொ.த (உயர்தர) பரீட்சையில் ஆங்கில மொழியில் ஒரு திறமைச் சித்தியை பெற்றுக்கொண்ட போதிய எண்ணிக்கையினரான விண்ணப்பகாரர்கள் இல்லாதவிடத்து க.பொ.த. (உயர்தர) பரீட்சையில் சிங்களம்/ தமிழ் மொழியில் திறமைச்சித்தியையும் க.பொ.த. (உயர்தர) பரீட்சையில் ஆங்கிலத்தில் சித்தியையும் அல்லது பொது ஆங்கிலத்தில் திறமைச்சித்தியையும் பெற்றுக்கொண்டமை, ஒரு தகைமையாகக் கருதப்படும்.

3.2 **அனுபவம்** : ஆவணப்படுத்தல் உதவியாளர் ஆகிய பதவிக்கான விண்ணப்பகாரர்கள் மாத்திரம் கணனியுடன் தொடர்புடைய பணியில் (உ-ம். Open Office Microsoft Word - Excel etc.) அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு தாபனத்தில் ஆகக் குறைந்தது ஒரு வருட அனுபவத்தையேனும் கொண்டிருத்தல் வேண்டும்.

பதிப்பாசிரியர் பதவிக்கான விண்ணப்பங்களுக்கு அனுபவம் இயைபானதல்ல.

3.3 **உடற்சார் தகைமைகள்**: ஒவ்வொரு விண்ணப்பகாரரும் இலங்கையில் எந்தவொரு பகுதியினுள் சேவையாற்றுவதற்கும் பதவிக்குரிய கடமைகளைப் புரிவதற்கும் போதிய உடல்சார் மற்றும் உளஞ்சார் பொருத்தமாந்தன்மையைக் கொண்டிருத்தல் வேண்டும். (தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பகாரர்கள் மருத்துவ நுண்ணாய்வுக்கு உட்படுத்தப்படுவர்)

3.4 **ஏனைய தகைமைகள்**:

(i) விண்ணப்பகாரர்கள் இலங்கைப் பிரசைகளாக இருத்தல் வேண்டும்.
(ii) விண்ணப்பகாரர்கள் சிறந்த பண்பையுடையவர்களாக இருத்தல் வேண்டும்.

3.5 **வயதெல்லை**: விண்ணப்பங்கள் முடிவுறும் திகதியன்றுள்ளவாறு 18 வயதுக்குக் குறையாமலும் 30 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

**04. எழுத்துப் பரீட்சை**:

4.1 எழுத்துப் பரீட்சை பதிப்பாசிரியர்

| வினாத்தாள் | நேரம் | மொத்தப் புள்ளிகள் | சித்திப் புள்ளி |
|---|---|---|---|
| சிங்களம்/தமிழ்/ஆங்கிலம் ஆகிய மொழிகள் மற்றும் எழுத்துப்பற்றிய அறிவினைப் பரீட்சித்தல் | 1 1/2 மணித்தியாலங்கள் | 100 | 40 |

**4.1.1 பாடத்திட்டம்**:

| வினாத்தாளின் பெயர் | பாடத்திட்டம் |
|---|---|
| சிங்களம்/தமிழ்/ஆங்கிலம் ஆகிய மொழிகள் மற்றும் எழுத்துப்பற்றிய அறிவினைப் பரீட்சித்தல் | ஒப்புநோக்குதல் திறன்களை, விசேடமாக இத்திணைக் களத்தின் வெளியீடுகளுடன் தொடர்புடைய ஒப்பு நோக்குதல் திறன்களை மதிப்பீடு செய்வதற்கு இரு பகுதிகளுடன் மூன்று கேள்விகளைக் கொண்டிருக்கும் ஒரு வினாத்தாள் மற்றும் சரியான சிங்கள/ தமிழ்/ ஆங்கில எழுத்துக்களை பரீட்சிப்பதற்கான ஒரு கேள்வி<br><br>**குறிப்பு** : தெளிவற்ற கையெழுத்து மற்றும் எழுத்துப் பிழைகளுக்குப் புள்ளிகள் குறைக்கப்படும். |

4.2 **எழுத்துப்பரீட்சை**: ஆவணப்படுத்தல் உதவியாளர்

| வினாத்தாள் | நேரம் | மொத்தப் புள்ளிகள் | சித்திப்புள்ளி |
|---|---|---|---|
| நுண்ணறிவுப் பரீட்சை | ஒரு மணித்தியாலம் | 100 | 40 |
| மொழித்தேர்ச்சி | ஒரு மணித்தியாலம் | 100 | 40 |

**4.2.1 பாடத்திட்டம்**:

| வினாத்தாளின் பெயர் | பாடத்திட்டம் |
|---|---|
| நுண்ணறிவுப் பரீட்சை | பொது அறிவு, தர்க்கவியல் திறன், கருத்து வெளிப்பாடு, புள்ளிவிபரவியல் திறன் மற்றும் கிரகித்தல் திறன் போன்றவற்றைப் பரீட்சிப்பதற்கான ஒரு வினாத்தாள் |
| மொழித்தேர்ச்சி | எழுத்து, இலக்கணம், துல்லியமான மற்றும் தெளிவான கருத்து வெளிப்பாடு, மொழி வெளிப்பாடுகளிலான அறிவு, சுருக்குதல் மற்றும் கட்டுரை எழுதுதல் போன்றவற்றைப் பரீட்சிப்பதற்கான ஒரு வினாத்தாள் |

4.3 **ஆட்சேர்ப்பு முறை**:

மேலேயுள்ள ஒவ்வொரு வினாத்தாளிலும் 40% இற்கு அதிகமான புள்ளிகளைப் பெற்றுக்கொண்ட விண்ணப்பகாரர்களிலிருந்து (வெற்றிடங்களின் எண்ணிக்கைக்குச் சமனாக) அதியுச்சப் புள்ளிகளைப் பெற்றுக்கொண்ட விண்ணப்பதாரர்கள், அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை மற்றும் விண்ணப்பகாரர்களின் உடல்சார் தகைமைகளைப் பரீட்சிப்பதற்கெனச் சட்டவரைஞரினால் நியமிக்கப்படும் நேர்காணல் குழாமொன்றினால் நேர்காணப்படுவர். நேர்காணலுக்காகப் புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.

**05. பரீட்சைக்கான நிபந்தனைகள்**:

5.1 இரண்டு பதவிகளுக்கும் விண்ணப்பிக்கும் விண்ணப்பகாரரொருவர் தனித்தனி விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

5.2 பரீட்சையானது சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூலங்களில் நடாத்தப்படும் விண்ணப்பதாரரொருவர் அவருடைய விண்ணப்பத்தில் குறிப்பிடப்படுகின்ற மொழிமூலத்தினைப் பின்னர் மாற்றுவதற்கு அனுமதிக்கப் படுவர்.

5.3 **பொய்யான தகவல்களைக் கொடுத்துதவுதல்**:

விண்ணப்பகாரரொருவர் தேவைப்பட்ட தகைமைகளைக் கொண்டிருக்கவில்லை என வெளிப்படுத்தப்படின், பரீட்சையின் பின்னரோ எந் நேரத்திலேனும் அவரின் /அவளின் பரீட்சார்த்திநிலை இரத்துச் செய்யப்படலாம்.

ஒருபரீட்சார்த்தியினால்வழங்கப்பட்டஏதேனும்தகவல்பொய்யானதுஎனஅறிந்துகொண்டுவழங்கப்பட்டுள்ளதென வெளிக்காட்டப்படின், அல்லது அவர்/அவள் ஏதேனும் முக்கியமான நிகழ்வை வேண்டுமென்று ஒடுக்கியிருப்பின் அவர்/அவள் பகிரங்க சேவையிலிருந்து நீக்கப்படலாம்.

5.4 **பரீட்சைக் கட்டணம்** : ரூபா 1000.00 ஆகும்.

விண்ணப்பகாரர்கள் மீளளிக்கத்தக்கதல்லாத ஒரு பரீட்சைக் கட்டணமாக ரூபா 1000.00 இனை ஏதேனும் ஒரு இலங்கை வங்கிக் கிளையில் "சட்டவரைஞரின்" சார்பாக, "இலங்கை வங்கியின் ஹல்ஸ்டோப் கிளையில்" பேணப்பட்ட நடைமுறைக் கணக்கிலக்கம் 7041488 இன் வரவிற்குச் செலுத்துதல் வேண்டுமென்பதுடன் விண்ணப்பத்தில் இயைபான இடத்தில் அதன் பற்றுச்சீட்டைத் தகுந்தமுறையில் ஒட்டிவிடுதலும் வேண்டும். அதன்

நிழற்படப்பிரதி ஒன்றினை வைத்திருப்பது பயனுள்ளதாக இருக்கும். விண்ணப்பகாரரின் பெயர் மற்றும் அவரது/ அவளது தேசிய அடையாள அட்டை இலக்கம் என்பன பணவைப்புப் படிவத்தில் பதியப்படுதல் வேண்டும்.

5.5 விண்ணப்பகாரர் அவரது/ அவளது சொந்தக் கையெழுத்திலேயே இயைபான தகவல்களை வழங்குதல் வேண்டும். விண்ணப்பங்களை முறையாக நிரப்புவதற்கு தவறியதன் விளைவாக ஏற்படும் ஏதேனும் இழப்புக்கு விண்ணப்பகாரர்களே பொறுப்புடையவர்களாவர். விண்ணப்பத்தில் நிழற்படப்பிரதியொன்றினை வைத்திருப்பது பயனுள்ளதாக இருக்கும் என்பதுடன் விண்ணப்பக்காரர் நிரப்பப்பட்ட விண்ணப்பம், பரீட்சை பற்றிய அறிவித்தலில் தரப்பட்டுள்ளதனை ஒத்திருக்கின்றதா என்பதைச் செவ்வை பார்த்தலும் வேண்டும். இல்லாவிடின், விண்ணப்பமானது ஏதேனும் அறிவித்தலின்றி நிராகரிக்கப்படும்.

**குறிப்பு**:
பரீட்சைக்கான பரீட்சார்த்தி நிலைக்குத் தகைமைபெற்றுள்ள எல்லா விண்ணப்பகாரர்களுக்கும் இலங்கை அபிவிருத்தி நிருவாக அனுமதி அட்டையொன்று அஞ்சல்மூலம் அனுப்பப்படும். விண்ணப்பகாரர் எவரும் அனுமதி அட்டையின்றி பரீட்சை மண்டப்பத்தினுள் உட்பிரவேசிக்க அனுமதிக்கப்படமாட்டார் என்பதுடன் விண்ணப்பகாரர் அவரது கையொப்பத்தை ஒரு தகைமைபெற்ற ஆளினால் முற்கூட்டியே அத்தாட்சிப்படுத்தப்படச்செய்து பரீட்சைத் திகதியன்று அதனைப் பரீட்சை மண்டபத்தின் மேற்பார்வையாளருக்குக் காண்பித்தலும் வேண்டும்.

5.6 விண்ணப்பங்கள் இதன்கண்ணுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு இணங்க 24 x 29 செ.மீ. கொண்ட A4 அளவிலான தாளின் இரண்டு பக்கங்களையும் பயன்படுத்தி தயாரிக்கப்படுதல் வேண்டும். அத்துடன் விண்ணப்பத்தின் -

(அ) 1 தொடக்கம் 7 வரையான தலைப்பு இலக்கங்கள் முதலாவது பக்கத்தில் காணப்படுவதாகக் தரப்படுதல் வேண்டும்.

(ஆ) 8 தொடக்கம் 13 வரையான தலைப்பு இலக்கங்கள் இரண்டாவது பக்கத்தில் காணப்படுவதாகக் தரப்படுதல் வேண்டும். அத்துடன்,

(இ) 14 தொடக்கம் 13 வரையான தலைப்பு இலக்கங்கள் மூன்றாவது பக்கத்தில் காணப்படுவதாகக் தரப்படுதல் வேண்டும்.

5.7 இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் பணிப்பாளர் தலைமையதிபதி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டவாறு தேவைப்பட்ட வயதெல்லையினுள் அடங்குகின்றவர்களும் முடிவுத் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னராகவோ இயைபான பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தியிருக்கின்றவர்களும் மற்றும் இயைபான பற்றுச்சீட்டுடன் சேர்த்து முறையாக நிரப்பப்பட்ட விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துள்ளவர்களுமான விண்ணப்பக்காரர்களுக்கு அனுமதி அட்டைகளை வழங்குவார். விண்ணப்பங்கள் பெறப்பட்டமை ஒப்புக்கொள்ளப்படமாட்டாது. அனுமதி அட்டைகளின் வழங்குகையின் மேல், விண்ணப்பத்தில் நீங்கள் வழங்கியுள்ள செல்லிடத் தொலைபேசி இலக்கத்துக்குக் குறுஞ்செய்தி அனுப்பப்படுவதன் மூலம் அப்பயன்பட நீங்கள் அறிவுறுத்தப்படுவீர்கள். அனுமதி அட்டைகள் தொடர்பிலான பிரச்சனைகள் தொடர்பான விசாரணைகள், இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் பரீட்சைக் கிளையுடன் 011- 5980225 என்னும் தொலைபேசி இலக்கத்தில் தொடர்புகொள்வதன் மூலம் செய்யப்பட முடியும். விசாரணைகளைச் செய்யும் போது ஏதேனும் தகவலை எண்பிப்பதற்கென விண்ணப்பத்தின் பிரதி, பரீட்சைக் கட்டணக் கொடுப்பனவிற்கான பற்றுச்சீட்டின் பிரதி, மற்றும் பெறப்பட்ட பதிவஞ்சல் பற்றுச்சீட்டு என்பவற்றை வைத்திருத்தல் பயனுள்ளதாகவிருக்கும்.

5.8 சட்டவரைஞர் பரீட்சையினால் பின்போடுவதற்கான அல்லது இரத்துச் செய்வதற்கான தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

5.9 பரீட்சையை நடாத்துவது தொடர்பாக இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் பணிப்பாளர் தலைமையதிபதியினால் விதிக்கப்படும் விதிகளுக்கு விண்ணப்பகாரர்கள் அமைந்தோராவர்.

5.10 கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "சட்டவரைஞர் திணைக்களத்தில் பதிப்பாசிரியர் தரம் III மற்றும் ஆவணப்படுத்தல் உதவியாளர் தரம் III ஆகிய பதவிகளுக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2022(2023 )" என்ற சொற்கள் சுட்டிக்காட்டப்படுதல் வேண்டும்.

5.11 **விண்ணப்பகாரரின் ஆளடையாளம்**:

விண்ணப்பகாரர் ஒவ்வொருவரும் பரீட்சை மண்டபத்தில் மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில் தனது ஆளடையாளத்தை பரீட்சை மண்டபத்தில் எண்பித்தல் வேண்டும். அத்தகைய நோக்கத்துக்காகப் பின்வரும் ஆவணங்களுள் ஒன்று மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்.

(அ) ஆட்களைப் பதிவுசெய்யும் திணைக்களத்தால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை
(ஆ) ஒரு செல்லுபடியான கடவுச்சீட்டு

5.12 **குறிப்பு**:

(அ) விண்ணப்பத்துடன் ஆவணம் எதுவும் அல்லது அதன் பிரதி எதுவும் இணைக்கப்படுதலாகாது
(ஆ) கோரப்படும்போது இயைபான ஆவணங்களின் மூலப்பிரதிகளைச் சமர்ப்பிக்கத்தவறுகின்ற விண்ணப்ப தாரர்களின் விண்ணப்பங்கள் கவனத்துட்கொள்ளப்படமாட்டாது.

06. முழுமையாக நிரப்பப்பட்ட விண்ணப்பங்கள் "சட்டவரைஞர், சட்டவரைஞர் திணைக்களம், இல. 80, அதிகரண மாவத்தை, கொழும்பு 12" என்ற முகவரியினை 2024, திசெம்பர் 30 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடிய வகையில் பதிவஞ்சலில் அனுப்பப்படுதல் வேண்டும்.

**07. பெறுபேறின் வழங்குகை**:

7.1 இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம், எழுத்துப் பரீட்சையின் மொத்தத் திறமை மதிப்புப்புள்ளிகளுக்கிணங்கத் தயாரிக்கப்பட்ட இறுதிப் பெறுபேற்றுத் தாளைச் சட்டவரைஞருக்குச் சமர்ப்பிக்கும்.

7.2 பதவிகளுடன் தொடர்புபட்ட நியமனங்கள் இறுதியானவையெனச் சட்டவரைஞர் அறிவிப்பதன்மேல், பெறுபேறுகளானவை எல்லாப் பரீட்சார்த்திகளுக்கும் அஞ்சல் மூலம் இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் பணிப்பாளர் தலைமையதிபதியினால் அறிவிக்கப்படும்.

08. நியமிக்கப்பட்ட ஆட்களின் எண்ணிக்கை மற்றும் நியமனம் பயனுக்குவரும் திகதி என்பன சட்டவரைஞரினால் தீர்மானிக்கப்படும். வெற்றிடங்களை நிரப்புதல், நிரப்பாது விடுதல் அல்லது பகுதியளவில் நிரப்புதல் என்பன தொடர்பிலான இறுதி முடிவு சட்டவரைஞருக்கு உரித்தாக்கப்படுதல் வேண்டும்.

09. இவ் வர்த்தமானி அறிவித்தலின் சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில உரைகளுக்கிடையில் ஏதேனும் ஒவ்வாமை அல்லது முரண்பாடு ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

10. இவ்வறிவித்தலில் குறிப்பிடப்படாத ஏதேனும் கருமம் தொடர்பான முடிவு சட்டவரைஞரினால் செய்யப்படும்.

தில்ருக்ஷி சமரவீர,
சட்டவரைஞர்,
சட்டவரைஞர் திணைக்களம்.

சட்டவரைஞர் திணைக்களம்,
இல.80, அதிகரண மாவத்தை,
கொழும்பு 12.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**சட்டவரைஞர் திணைக்களத்தில் வகுதி 2 தொழில்நுட்பம் சாரா முகாமைத்துவ உதவியாளருக்கான பதிப்பாசிரியர் தரம் III மற்றும் ஆவணப்படுத்தல் உதவியாளர் தரம் III ஆகிய பதவிகளிலான வெற்றிடங்களை நிரப்புவதற்கான திறந்த போட்டிப்பரீட்சை - 2024**

ஒன்றில் சிங்கள அல்லது தமிழ் மொழியில் நிரப்பப்பட்ட விண்ணப்பத்தில், மாதிரி விண்ணப்பத்தின் தலைப்பில் காணப்படும் பரீட்சையின் பெயர், முறையே சிங்களம் அல்லது தமிழுக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் உள்ளடக்கப்படுதல் வேண்டும்.

01. விண்ணப்பிக்கும் பதவி: ☐

| | | | |
|---|---|---|---|
| சிங்களப் பதிப்பாசிரியர் | - 1 | சிங்கள ஆவணப்படுத்தல் உதவியாளர் | - 4 |
| தமிழ்ப் பதிப்பாசிரியர் | - 2 | தமிழ் ஆவணப்படுத்தல் உதவியாளர் | - 5 |
| ஆங்கிலப் பதிப்பாசிரியர் | - 3 | ஆங்கில ஆவணப்படுத்தல் உதவியாளர் | - 6 |

(இயைபான இலக்கத்தைப் பெட்டியில் எழுதவும்)

02. விண்ணப்பதாரர் பரீட்சைக்குத் தோற்ற உட்கருதும் மொழிமூலம்: ☐

சிங்களம் - 1 தமிழ் - 2 ஆங்கிலம் - 3

( இயைபான இலக்கத்தைப் பெட்டியில் எழுதவும்)

03. முடிவில் முதலெழுத்துக்களுடன் கடைசிப் பெயர்:
i. (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) : ..........................................................................................................................
..........................................................................................................................
(உ-ம் : GUNAWARDHANA, M. G. B. S. K. ) HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDHANA)
ii. சிங்களத்தில்/தமிழில்:

04. முதலெழுத்துக்களால் குறித்துக்காட்டப்பட்ட பெயர்:
i. (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) : ..........................................................................................................................
..........................................................................................................................
ii. சிங்களத்தில்/தமிழில்:

05. நிரந்தர முகவரி:
i. (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) : ..........................................................................................................................
..........................................................................................................................
ii. சிங்களத்தில்/தமிழில்:

06. அனுமதி அட்டை அனுப்பப்பட வேண்டிய முகவரி: (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) : ..............................................
..........................................................................................................................

07. பால்நிலை: ஆண் - 0 ☐
பெண் - 1
(இயைபான இலக்கத்தைப் பெட்டியில் எழுதவும்)

08. செல்லிடத் தொலைபேசி இலக்கம்:......................................................................................

09. தேசிய அடையாள அட்டை இல.: ☐☐☐☐☐☐☐☐☐☐☐☐

10. நீங்கள் ஒரு இலங்கைப் பிரசையா:
ஆம்-1 இல்லை- 2 ☐
( இயைபான இலக்கத்தைப் பெட்டியில் எழுதவும்)

11. பிறந்த திகதி : வருடம் :.................... மாதம் :.................... நாட்கள் : ....................

12. ............................ ஆந் திகதியில் வயது : வருடம்:.................... மாதம்:.................. நாட்கள்:......................

13. கல்வித் தகைமைகள்:

I : க.பொ.த.(சாதாரண தரம்):
(i) வருடம் :....................
(ii) சுட்டிலக்கம்:......................................

| பாடம் | தரம் | பாடம் | தரம் |
|---|---|---|---|
| 1. | | 6. | |
| 2. | | 7. | |
| 3. | | 8. | |
| 4. | | 9. | |
| 5. | | 10. | |

II. க.பொ.த.(உயர் தரம்):
(i) வருடம் :....................
(ii) சுட்டிலக்கம்:......................................

| பாடம் | தரம் | பாடம் | தரம் |
|---|---|---|---|
| 1. | | 3. | |
| 2. | | 4. | |

III. வேறு எவையேனும் இயைபான கல்விசார் /உயர் தொழில்சார் தகைமைகளைக் குறிப்பிடவும்: ...............................................

IV. உயர் தொழில்சார் அனுபவம்: ..............................................

14. I . நீங்கள் எப்போதாவது ஒரு சட்ட நீதிமன்றத்தினால் தவறொன்றுக்குக் குற்றவாளியாகக் காணப்பட்டுள்ளீர்களா?
ஆம் ☐ இல்லை ☐

ஆம், எனின் விபரங்களைக் குறிப்பிடுக:..........................................................................................................................

II . பரீட்சைக் கட்டணம்:
பற்றுச்சீட்டு இல.:
கொடுப்பனவுத் திகதி:
கொடுப்பனவு செய்யப்பட்ட வங்கி மற்றும் கிளை:

திடமான பற்றுச்சீட்டினை இங்கே ஒட்டவும்

15. விண்ணப்பதாரியின் வெளிப்படுத்துகை :

(அ) மேற்போந்த விபரங்கள் எனது அறிவுக்கு எட்டிய வரையில் உண்மையானவையும் செம்மையானவையும் என மரியாதையுடன் வெளிப்படுத்துகின்றேன்/ உறுதிப்படுத்துகின்றேன்.

(ஆ) நியமிக்கப்படுவதற்கு முன்னர் என்னால் செய்யப்பட்ட இவ்வெளிப்படுத்துகையானது பொய்யானதாகவோ அல்லது பிழையானதாகவோ எண்பிக்கப்படுமிடத்து, நியமனத்திற்காகத் தகுதியற்றவராகக் காணப்படுவதற்கும் அல்லது என்னால் செய்யப்பட்ட இவ்வெளிப்படுத்துகை நியமிக்கப்பட்டபின்னர் பொய்யானதாகவோ அல்லது பிழையானதாகவோ எண்பிக்கப்படுமிடத்து இயைபான நடவடிக்கைமுறைக்கமைய, ஏதேனும் நட்டஈடின்றி சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கும் நான் ஆளாகவுள்ளேன் என்பதனை நானறிவேன். மேலும், பரீட்சையை நடாத்துதல் தொடர்பாக இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் பணிப்பாளர் தலைமையதிபதியினால் விதிக்கப்பட்ட விதிகளினால் நான் பிணிக்கப்பட்டுள்ளேன் என்றும் நான் பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தியுள்ளேன் என்றும் பற்றுச்சீட்டை இங்கு ஒட்டியுள்ளேன் என்றும் வெளிப்படுத்துகின்றேன்.

...................................... ....................................................
திகதி விண்ணப்பதாரியின் கையொப்பம்

16. **விண்ணப்பகாரரினது கையொப்பத்தின் அத்தாட்சிப்படுத்துகை:**

இவ்விண்ணப்பப்படிவத்தை சமர்ப்பிக்கின்ற திரு. /திருமதி/செல்வி.......................................................... (முழுப்பெயர்) என்பவர் எனக்குத் தனிப்பட்ட முறையில் தெரிந்தவர் எனவும், அவர்/ அவள் / அவரது / அவளது கையொப்பத்தினை 2024, .................. ஆந் திகதியன்று என் முன்னிலையில் இட்டார் எனவும் தேவைப்பட்ட பரீட்சைக் கட்டணமானது செலுத்தப்பட்டு அதன் பற்றுச்சீட்டானது ஒட்டப்பட்டுள்ளது எனவும் இத்தால் சான்றுப்படுத்துகின்றேன்.

திகதி :..................................... ....................................................
அத்தாட்சிப்படுத்துபவரின் கையொப்பம்

அத்தாட்சிப்படுத்துபவரின் முழுப் பெயர் :................................
பதவிப் பெயர் :.................................
முகவரி :...............................................
திகதி :................................
(அலுவலக முறையான இலச்சினையை பொறிக்கவும்)

17. **திணைக்கத் தலைவரின் அத்தாட்சிப்படுத்துகை:**
விண்ணப்பகாரரினால் கொடுத்துதவப்பட்ட மேற் சொல்லப்பட்ட விபரங்களை நான் பரிசோதனை செய்துள்ளேன் என்றும் அவை சரியானவை என்றும் அவரின் /அவளின் செயல்நிறைவேற்றம், வருகை மற்றும் நடத்தை என்பன திருப்திகரமானவை என்றும் சான்றளிக்கின்றேன். விண்ணப்பகாரர் இப்பதவிக்குத் தெரிவுசெய்யப்படின் அவர்/ அவள் சேவையிலிருந்து விடுவிக்கப்படலாம் /சேவையிலிருந்து விடுவிக்கப்படலாகாது.

..............................,
திணைக்கள / நிறுவனத் தலைவரின் கையொப்பம்.

பதவிப் பெயர்:...........................................
திகதி :...............................
(அலுவலக முறையான இலச்சினையைப் பொறிக்கவும்)

11-377

---

## இலங்கைப் பாராளுமன்றத்தின் பாராளுமன்ற உத்தியோகத்தர் பதவிக்கு ஆட்சேர்த்துக்கொள்வதற்கான திறந்த போட்டிப்பரீட்சை -2024

## Open Competitive Examination for Recruitment to the Post of Parliamentary Officer in Parliament of Sri Lanka - 2024

01. இலங்கைப் பாராளுமன்றத்தின் பாராளுமன்ற உத்தியோகத்தர் பதவிக்கு ஆட்சேர்த்துக் கொள்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை, பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் 2025 ஆம் ஆண்டு மார்ச்மாதம்கொழும்பில் நடத்தப்படும் என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

(அ) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாள் 2024 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 30 ஆம் திகதியாகும்.

(ஆ) இந்த அறிவித்தல் பற்றிய விபரங்களை www.parliament.lk எனும் இணையத்தளத்தினூடாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

02. பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் நடத்தப்படும் எழுத்துப் பரீட்சையில் பெற்ற புள்ளிகளினதும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையில் பெற்ற புள்ளிகளினதும் கூட்டுத்தொகைக்கிணங்க அதிகூடிய புள்ளிகளைப் பெற்ற பரீட்சாத்திகளுக்கு இடையிலிருந்து வெற்றிடம் நிலவுகின்ற 20வெற்றிடங்களுக்கு நியமிப்பதற்காக தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

பாராளுமன்றத்தின் நிர்வாகம், சட்டவாக்க சேவை, நிதி மற்றும் வழங்கல்கள் திணைக்கள கடமைகளின் முகாமைத்துவத்திற்கு ஒத்தாசை வழங்கவும், பாராளுமன்ற செயலாளர் நாயகத்தினால் பொறுப்பளிக்கப்படும் வேறு எந்தவொரு கடமையையும் நிறைவேற்றவும் வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

03. மாதாந்த சம்பள அளவுத்திட்டம்:- 2016.11.07 ஆம் திகதிய 06/2016 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றிக்கையின் I ஆம் அட்டவணையின் பிரகாரம் இந்தப் பதவிக்குரிய சம்பள அளவுத்திட்டம் ரூ. 34,605 - 9 × 660/3 × 755-ரூபா 42810.00 ஆகும். உங்களுக்கான சம்பளம்மேற்குறித்த சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு இணங்க அதன் II ஆம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு செலுத்தப்படும் (அனைத்துக் கொடுப்பனவுகளும் அடங்கலாக இந்தப் பதவிக்குரிய ஆகக்குறைந்த மொத்த மாதாந்த சம்பளம் ஏறக்குறைய ரூ. 90,000.00 ஆகும்.)

04. **ஆட்சேர்த்துக்கொள்வதற்கான தகைமைகள்:-**

(அ) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

(ஆ) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற இறுதித் திகதிற்கு 21 வயதுக்கு குறையாமலும் 35வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.அதற்கிணங்க 2003 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 30 ஆம் திகதி முன்னர் மற்றும் 1989 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 30 ஆம் திகதிற்கு பின்னர் பிறந்தவர்கள் மாத்திரம் இந்தப் பதவிற்கு விண்ணப்பிப்பதற்கு தகைமை பெறுவார்கள்.

(ஏற்கனவே அரச/ மாகாண அரச சேவையில் அல்லது அரசாங்க கூட்டுத்தாபனங்களில் மற்றும் நியதிச்சட்ட சபைகளில் ஒரு பதவியில் பணியாற்றுபவர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது).

(இ) சிறந்த நல்லொழுக்கமுடையவராக இருத்தல் வேண்டும்.

(ஈ) கீழே குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

(i) அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக்கழகத்திலிருந்து அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பட்டம் வழங்கும் ஒரு நிறுவனத்திலிருந்து பட்டம் ஒன்றைப் பெற்றிருத்தல்.

மற்றும்

(ii) இரண்டு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம் அல்லது தமிழ், ஆங்கிலம்அல்லது ஆங்கில இலக்கியம்மற்றும் கணிதம் ஆகிய பாடங்களுக்கு திறமைச்சித்திகளுடன் க.பொ.த.(சா/த) பரீட்சையில் 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

**கவனிக்குக**: ஒவ்வொரு விண்ணப்பதாரரும் குறித்த பதவிக்குரிய சகல தகைமைகளையும் 2024 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம்30 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கட்டாயமாக பூர்த்திசெய்திருத்தல் வேண்டும். இப்பரீட்சைக்கு விசேட தேவையுடைய விண்ணப்பதாரிகள் விண்ணப்பிக்கும் போது அது தொடர்பாக விண்ணப்ப படிவத்தில் குறிப்பிடுவதோடு குறித்த தேவைப்பாடு தொடர்பான வைத்திய அறிக்கைகளை விண்ணப்ப படிவத்தோடு முன்வைக்க வேண்டும்.

05. **ஆட்சேர்ப்பு முறைமை**: எழுத்துமூல பரீட்சை மற்றும் ஒரு கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை ஆகியவற்றின் மூலம் ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

06. **பரீட்சை நடைமுறை**:

(அ) **எழுத்துமூலப் பரீட்சை**: இந்தப் பரீட்சை ஆங்கில மொழி ஆற்றலையும், மொழிபெயர்ப்புத் திறனையும்,பொது அறிவையும், நுண்ணறிவையும் மதிப்பிடும் வகையில் இரண்டு வினாத்தாள்களை உள்ளடக்கியதாகும். இந்த இரண்டு வினாத்தாள்களும் ஆங்கில மொழியில் காணப்படும். எவ்வாறாயினும், மொழி ஆற்றலை மதிப்பிடும் வினாத்தாளில் ஒரு மொழிபெயர்ப்பு பந்தி உள்ளடங்கியிருப்பதால் விண்ணப்பதாரர்கள் தாம் பரீட்சைக்கு தோற்றுவதற்கு எதிர்பார்க்கின்ற மொழிமூலத்தை விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிடுவதற்கு கவனத்திற்கொள்ள வேண்டும்.

| பாடம் | புள்ளிகள் | நேரம் | சித்தியடைவதற்கு பெறவேண்டிய ஆகக்குறைந்த புள்ளிகள் |
|---|---|---|---|
| மொழி மற்றும் மொழிபெயர்ப்பு ஆற்றல் | 100 | 2 மணித்தியாலம் | 50% |
| பொது அறிவும் நுண்ணறிவும் | 100 | 2 மணித்தியாலம் | 50% |

(1) மொழி மற்றும் மொழிபெயர்ப்பு ஆற்றல்:- இந்த வினாத்தாள் விண்ணப்பதாரர்களின் ஆங்கில மொழி ஆற்றலைமதிப்பிடும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ள கிரகித்தல்,கட்டுரையெழுதுதல், பந்தியை வாசித்து சுருக்கமெழுதுதல், சிங்கள மொழியிலுள்ள/ தமிழ் மொழியிலுள்ள ஒரு பந்தியை ஆங்கிலத்திற்கு மொழிபெயர்த்தல்,ஆங்கில மொழியிலுள்ள ஒரு பந்தியை சிங்களத்திற்கு/தமிழுக்கு மொழிபெயர்த்தல் ஆகிய வினாக்களைக் கொண்டதாகும். சகல வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

(2) பொது அறிவும் நுண்ணறிவும்: 1 மணித்தியால இரண்டு பகுதிகளைக் கொண்ட பொது அறிவுவினாத்தாள் ஆகும்.விண்ணப்பதாரர்களின்உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு விவகாரங்கள் பற்றிய அறிவைமதிப்பிடும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளவினாக்களை உள்ளடக்கியதாகும். இதில் அரசியலமைப்பு, சுயாதீன ஆணைக்குழுக்கள், பாராளுமன்றத்தின் நடைமுறைகள் மற்றும் செயன்முறைகள், நீதி நிருவாகம்,நல்லாட்சிக் கோட்பாடுகள் முதலிய விடயப்பிரிவுகளில் பொதுவான அறிவு மதிப்பிடப்படும். சகல வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

(ஆ) **கட்டமைக்கப்பட்டநேர்முகப் பரீட்சை**

:

பாராளுமன்ற செயலாளர் நாயகத்தினால் நியமிக்கப்படும் ஒரு நேர்முகப் பரீட்சைக் குழுவினால் விண்ணப்பதாரர்களின் தொடர்பாடல் திறமை மற்றும் மேலதிக மொழியறிவு, மேலதிக கல்வித் தகைமைகள், கணனி எழுத்தறிவு, சேவை அனுபவம் மற்றும் துறைசார்அறிவுமற்றும் ஆளுமை,தலைமைத்துவம் மற்றும்நேர்முகப் பரீட்சையின் போது காட்டும் திறமைகளை மதிப்பிடும் பொருட்டு கீழ்காணும் தகவு திறன்களுக்கு அமைய கட்டமைக்கப்பட்ட ஒரு நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும்.

இதில் பெற்றுக்கொள்ளக்கூடியஆகக்கூடியபுள்ளிகள்நூறு (100).

| | விடயப் பிரிவு | ஆகக்கூடிய புள்ளிகள் |
|---|---|---|
| 1 | தொடர்பாடல் திறமை மற்றும் மேலதிக மொழியறிவு | 20 |
| 2 | மேலதிக கல்வித் தகைமைகள் | 20 |
| 3 | கணனி எழுத்தறிவு | 20 |
| 4 | சேவை அனுபவம் மற்றும் துறைசார்அறிவு | 20 |
| 5 | தலைமைத்துவம் மற்றும் நேர்முகப் பரீட்சையின் போது காட்டும் திறமைகள் | 20 |
| | **கூட்டுத்தொகை** | **100** |

**குறிப்பு**: விடையளிக்கும் போது கையெழுத்துக்களிலும் மற்றும் எழுத்திலக்கணத்திலும் கவனம் செலுத்துதல் வேண்டும்.

07. சேவையில் அமர்த்துவது தொடர்பான விதிகளும் நிபந்தனைகளும்:

(அ) இந்தப் பதவி நிரந்தரமானதாகும். இந்தப் பதவிக்குரிய ஓய்வூதியத்திட்டம் தொடர்பாக அரசாங்கம் எதிர்காலத்தில் மேற்கொள்ளவிருக்கும் கொள்கை ரீதியான தீர்மானங்களுக்கு விண்ணப்பதாரர்கள் இயைந்தொழுக வேண்டும். தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள் முதலில் மூன்று (3) வருட தகுதிகாண் காலத்திற்கு அமைய நியமிக்கப்படுவர்கள். அரசாங்க சேவையில்/மாகாண அரசசேவையில்/ பாராளுமன்ற சேவையில் நிரந்த ஓய்வூதியமுடைய ஒரு பதவியில் பணியாற்றுகின்ற எவரேனும் ஒருவர் தெரிவு செய்யப்படும்பட்சத்தில் அவர் ஒரு வருட பதிற்கடமைகாலத்திற்கு அமைய நியமிக்கப்படுவார்.

(ஆ) தெரிவுசெய்யப்படும் நபர்களின் எண்ணிக்கையும் மற்றும் நியமனம் செயல்வலுப்பெறும் திகதியும் பாராளுமன்ற செயலாளர் நாயகத்தினால் தீர்மானிக்கப்படும். ஏதாவது ஒரு வெற்றிடத்தை/ சகல வெற்றிடங்களையும் பூர்த்திசெய்யாமல் விடுவதற்கு, பாராளுமன்ற செயலாளர் நாயகத்திற்கு அதிகாரமுண்டு.

(இ) பாராளுமன்ற உத்தியோகத்தர் பதவிக்கு தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள் தகுதிகாண்/ பதிற்கடமை காலப்பகுதியின் முதலாவது வருடத்தில் கணினிப் பிரயோகம் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்ளவேண்டும். MICROSOFT WORD ஐ பயன்படுத்தி 25 நிமிடங்களில் 250 சொற்களுக்கு குறையாத ஒரு ஆங்கில கடிதத்தையும் மற்றும் 25 நிமிடங்களில் 150 சொற்களுக்கு குறையாத ஒருசிங்கள/தமிழ் கடிதத்தையும் தயாரிக்கும் ஆற்றலைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

(ஈ) தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர்கள் பாராளுமன்ற செயலாளர் நாயகத்தின் பணியாட்டொகுதிற்குரிய நிதி மற்றும் திணைக்கள ஒழுங்குவிதிகளுக்கு இயைந்தொழுக வேண்டும்.

(உ) தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர்கள் விதவைகள் மற்றும் அநாதைகள்/விதுரர்கள் மற்றும் அநாதைகள் நிதியத்திற்கு தமது சம்பளத்திலிருந்து அரசாங்கம் தீர்மானிக்கும் வீதத்தில் பங்களிப்பு செய்ய வேண்டும்.

(ஊ) தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர்கள் மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவார்கள்.

(எ) தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர்கள் நியமிக்கப்பட முன்னர் அவர்கள் பற்றிய பாதுகாப்பு விடுவிப்பு அறிக்கைகள் பெற்றுக்கொள்ளப்படும்.

(ஏ) அரசாங்க/ மாகாண அரச சேவையிலுள்ள விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பப் படிவங்களைஅந்தந்தத் திணைக்கள/நிறுவன தலைவர்களினூடாக அனுப்பிவைத்தல் வேண்டும்.

08. **பொய்யான தகவல்களுக்குரிய தண்டனை**: விண்ணப்பப்படிவத்தைப் பூர்த்தி செய்யும்போது மிகவும் கவனமாக சரியான தகவல்கள் வழங்கப்படுதல் வேண்டும். இந்தப் பரீட்சையின் ஒழுங்குவிதிகளுக்கு இணங்க எவரேனும் விண்ணப்பதாரர் ஒருவர் தகைமையற்றவர் என கண்டறியப்படும் பட்சத்தில் பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சை நடைபெறும்போது அல்லது பரீட்சையின் பின்னர் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவரது பரீட்சார்த்திநிலை இரத்துச் செய்யப்படலாம்.

09. **பரீட்சைக் கட்டணம்**: பரீட்சைக் கட்டணம் ரூபா 600.00. இந்தக் கட்டணம் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் 20-03-02-13ஆம் இலக்க வருமானத் தலைப்பின் கீழ்அரசாங்கத்தின் வருமானத்திற்கு வரவு வைக்கப்படும் வகையில் நாட்டிலுள்ள ஏதாவது ஒரு தபால் அலுவலகத்தில் /உப தபால் அலுவலகத்தில் /மாவட்ட செயலகத்தில் /பிரதேச செயலகத்தில் மாத்திரம் செலுத்தப்படுதல் வேண்டும். குறித்த கட்டணம் செலுத்தப்பட்டுவிண்ணப்பதாரரின் பெயரில் பெற்றுக் கொள்ளப்படும் உரிய பற்றுச்சீட்டு விண்ணப்பப்படிவத்தில் காட்டப்பட்டுள்ள விதத்தில் உரிய இடத்தில் கழறாதவாறு ஒட்டப்படுதல் வேண்டும் (எதிர்கால உபயோகத்திற்காக பற்றுச்சீட்டின் ஒரு பிரதியை வைத்திருப்பது பயனுள்ளதாகும்).எக்காரணம்கொண்டும் பரீட்சை கட்டணம்

மீளளிக்கப்படமாட்டாது. மேலும் வேறு பரீட்சைகளுக்கு அந்தக் கட்டணம் மாற்றப்படவும் மாட்டாது. மேலும் காசுக் கட்டளைகள் மற்றும் முத்திரைகள் ஏற்றுக்கொள்ளப்படவும்மாட்டா.

10. **விண்ணப்பிக்கும் முறை**:

(அ) விண்ணப்பப்படிவம் இந்த அறிவித்தலுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கு அமைய தயாரிக்கப்படுதல் வேண்டும். A4 ($8\frac{1}{2}" \times 12"$) அளவான ஒரு தாளின் இரண்டு பக்கங்களையும் உபயோகித்து விண்ணப்பப் படிவம் தயாரிக்கப்படுதல் வேண்டும். 01 தொடக்கம் 03வரையான தலைப்புகள் தாளின் முதல் பக்கத்திலும், 04 தொடக்கம் 07வரையான தலைப்புகள் இரண்டாம் பக்கத்திலும், 08 தொடக்கம் 10 வரையான தலைப்புகள் மூன்றாம் பக்கத்திலும் அமையும் வகையில் தயாரிக்கப்படுதல் வேண்டும் என்பதை குறிப்பாக கவனத்தில் கொள்ளவும். விண்ணப்பப்படிவத்தின் தலைப்பில் குறிப்பிட்டுள்ள பரீட்சையின் பெயரை சிங்கள மற்றும் தமிழ் மொழி விண்ணப்பப்படிவங்களில் சிங்களம் /தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும்,தமிழ் மொழிமூல விண்ணப்பப்படிவங்களில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் குறிப்பிடுதல் வேண்டும்.

உரிய மாதிரிப் படிவத்தை அனுசரிக்காத, உரிய திகதிக்கு முன்னர் குறித்த பரீட்சைக் கட்டணம் செலுத்தப்படாத மற்றும் உரிய முறையில் பூரணப்படுத்தப்படாத விண்ணப்பப் படிவங்கள் அறிவித்தலின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவம் உரிய முறையில் பூரணப்படுத்தப்படாததால் ஏற்படும் இழப்புகளை விண்ணப்பதாரர்களே பொறுப்பேற்க வேண்டும். விண்ணப்பப்படிவத்தின் ஒரு புகைப்படப்பிரதியைதம்வசம் வைத்திருப்பது பயனுள்ளதாகும். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவம் பரீட்சை தொடர்பான அறிவித்தலின் இறுதியில் தரப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கு அமைவானதா என்பதை விண்ணப்பதாரர்கள் பரிசீலித்துக்கொள்ள வேண்டும்.

(ஆ) வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை பூர்த்திசெய்வதர்கள் மாத்திரம் விண்ணபித்திருப்பார்கள் எனும் முன்கூட்டிய அனுமானத்திற்கு இணங்க உரிய பரீட்சைக் கட்டணத்தை செலுத்தி குறிப்பிடப்பட்டுள்ள திகதியில் அல்லது அதற்கு முன்னர் தமது விண்ணப்பப்படிவங்களை சமர்ப்பித்துள்ள சகல விண்ணப்பதாரர்களுக்கும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் போட்டிப் பரீட்சைக்கு தோற்றுவதற்கான சந்தர்ப்பம் வழங்கப்படும். போட்டிப் பரீட்சைக்கு தோற்றும் நிமித்தம் அனுப்பிவைக்கப்படும் அனுமதி அட்டை விண்ணபதாரர் இந்தப்பதவிக்கான தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ளார் எனகருதப்படமாட்டாது. விண்ணப்பதாரர்கள்நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டு, வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை பூர்த்திசெய்துள்ளனரா என்பதை பரிசீலிக்கும்போது தேவையான தகைமைகள் இல்லையெனத் தெரியவருமிடத்து அவர்களின் பரீட்சார்த்திநிலை இரத்துச்செய்யப்படும்.

(இ) விண்ணப்பப் படிவத்தை தாங்கிவருகின்ற கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "இலங்கைப் பாராளுமன்ற உத்தியோகத்தர் பதவிக்கு ஆட்சேர்த்துக்கொள்வதற்கான போட்டிப் பரீட்சை - (2024)" எனக் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

(ஈ) பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் 2024 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 30 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர்கீழ்காணும்முகவரிக்குபதிவுத்தபாலில் அனுப்பப்படுதல் வேண்டும்.விண்ணப்பங்கள் தபாலில் காணமல் போனமை அல்லது தாமதித்தமை தொடர்பில் எந்தவிதமான முறைப்பாடுகளும் கருத்திற்கொள்ளப்படாது.

பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்
ஒழுங்கமைப்பு (தாபனமற்றும் வெளிநாட்டு) பரீட்சைகள் கிளை,
இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம்,
த.பெ. 1503
கொழும்பு.

11. **பரீட்சைக்கு தோற்றுதல்**:

(அ) விண்ணப்பப்படிவம் கிடைத்தமை பற்றி அறிவிக்கப்படமாட்டாது. விண்ணப்பதாரர்களுக்கு அனுமதி அட்டைகள் அனுப்பப்பட்டவுடன் அது பற்றிய அறிவித்தல் இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தினால் அதன் இணையத்தளத்தில் வெளியிடப்படும் என்பதுடன் அது பற்றி ஒரு குறுங்செய்தியின் (SMS) மூலம் விண்ணப்பதாரர்களுக்கு அறிவிக்கவும்படும். அறிவித்தல் வெளியாகி 02 அல்லது 03 நாட்கள் கழிந்தும் அனுமதி அட்டை கிடைக்கவில்லை எனில் அறிவித்தலில் குறிப்பிட்டுள்ளவாறு இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்திற்கு அது பற்றி அறிவிக்க வேண்டும். அவ்வாறு அறிவிக்கும்போது விண்ணபித்த பரீட்சையின் பெயரையும்,விண்ணபதாரியின் முழுப் பெயரையும்,தேசிய அடையாள அட்டை இலக்கத்தையும் முகவரியையும் குறிப்பிடுதல் வேண்டும். கொழும்புக்கு வெளியிலுள்ள விண்ணப்பதாரராயின், அனுமதி அட்டையின் ஒரு பிரதியை தொலைநகலினூடாக அனுப்பிவைக்குமாறு கோரி மேற்குறித்த விபரங்களுடன் தனது தொலைநகல் இலக்கத்தைக் குறிப்பிட்டு ஒரு கடிதத்தை,இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள எமது தொலைநகல் இலக்கத்துக்கு

தொலைநகல் செய்து வினவுவது பயனுள்ளதாகும். மேலும்,பரீட்சைகள் திணைக்களத்தினால் கோரப்படுகின்ற தேவையான விபரங்களை உறுதிப்படுத்த விண்ணப்பதாரியிடமுள்ள விண்ணப்பப் படிவத்தின் பிரதி,பரீட்சைக் கட்டணத்திற்கான பற்றுச்சீட்டின் பிரதி,விண்ணப்பப் படிவத்தை பதிவுத் தபாலில் அனுப்பியமைக்கான பற்றுச்சீட்டு என்பவற்றை தயார் நிலையில் வைத்திருப்பது பயன் அளிக்கக்கூடியதாகும்.

(ஆ) விண்ணபப்படிவத்திலும் மற்றும் பரீட்சைக்கான அனுமதி அட்டையிலும் விண்ணப்பதாரரின் கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். ஏதேனும் ஒரு நிறுவனத்திலிருந்து பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர் தனது கையொப்பத்தை தனது நிறுவனத்தின் தலைவரால் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரால், அவ்வாறல்லாத விண்ணப்பதாரர் தனது கையொப்பத்தை அரசாங்க பாடசாலை அதிபர் /ஓய்வுபெற்ற உத்தியோகத்தர், தனது பிரிவின் கிராம உத்தியோகத்தர், சமாதான நீதவான், சத்தியப் பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி,பிரசித்த நொத்தாரிசுஅல்லது பௌத்த விகாரையின் தலைமைப் பிக்கு/பிற மத ஸ்தலங்களுக்கு பொறுப்பாகவுள்ள /மதத் தலைவர்களில் முக்கிய நிலை வகிப்பவர் ஆகியோர்களில் ஒருவரால் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். குறித்துரைக்கப்பட்ட பரீட்சை நிலையத்தில் பரீட்சைக்கு தான் தோற்ற வேண்டும் என்பதுடன், அவ்வாறு தோற்றும் முதலாவது தடவையிலேயே பரீட்சை நிலையத்திற்கு பொறுப்பு உடைய பொறுப்பதிகாரியிடம் தனது கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்டுள்ள அனுமதி அட்டையை சமர்ப்பிக்க வேண்டும். அவ்வாறு உறுதிப்படுத்தப்பட்ட அனுமதி அட்டையை சமர்ப்பிக்காத விண்ணப்பதாரர் பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்படமாட்டார்.

(இ) **பரீட்சையின் பெறுபேறுகள்**: இந்த அறிவித்தலின் 06 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம், எழுத்துமூல பரீட்சைக்குத் தோற்றி தகைமை பெறும் பரீட்சார்த்திகளுக்கு மத்தியில் திறன் அடிப்படையில், பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கையில் இரண்டு மடங்கு, பரீட்சை சுட்டெண்களின் ஒழுங்கில் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றியதன் பின்னர், எழுத்துமூல பரீட்சையிலும் மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையிலும் பெற்ற மொத்தப் புள்ளிகளின் கூட்டுத் தொகை அடிப்படையில், திறமை ஒழுங்கில் பெறுபேறுகள் அடங்கிய பட்டியல் தயாரிக்கப்படும். இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம்பாராளுமன்ற செயலாளர் நாயகத்துக்கு எழுத்துமூல பரீட்சையின் பெறுபேறுகளை சமர்ப்பித்த பின்னர்,அந்த எழுத்துப் பரீட்சைக்குத் தோற்றிய சகல பரீட்சாத்திகளுக்கும் அவர்களின் பெறுபேறுகளை தனிப்பட்ட ரீதியில் அனுப்பி வைப்பதற்கு அல்லது இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தின் www.results.exams.gov.lk எனும் இணையத்தளத்தில் வெளியிடுவதற்கு திணைக் களத்தினால் நடவடிக்கை எடுக்கப்படும்.

12. பரீட்சார்த்திகள் எதிர்க்கொள்ளும் ஒவ்வொரு பாடத்திற்கும் மண்டப பொறுப்பதிகாரி திருப்தியடையும் வகையில் ஆளடையாளத்தை உறுதிசெய்வதோடு அதற்காக கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களில் ஒன்றை சமர்ப்பிக்க வேண்டும்.

(i) தேசிய அடையாள அட்டை
(ii) செல்லுபடியான கடவுச்சீட்டு
(iii) செல்லுபடியான இலங்கை சாரதி அனுமதிப்பத்திரம்

அதேபோன்று பரீட்சாத்திகள் ஆளடையாளத்தை உறுதிபடுத்தும் வகையில் பரீட்சை மண்டபத்திற்குள் நுழைவது தொடக்கம் பரீட்சை நிறைவு பெற்று வெளியேறும் வரை தமது காதுகள் உட்பட முகத்தை மூடாது பரீட்சைக்கு முகம் கொடுக்க வேண்டும்.அவ்வாறு செய்ய மறுப்பவர்கள் பரீட்சை மண்டபத்திற்குள் நுழைய அனுமதிக்கப்படமாட்டார்.

13. பரீட்சையை நடத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் தொடர்பில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் ஒழுங்குவிதிகளுக்கு பரீட்சார்த்திகள்இயைந்தொழுக வேண்டும். இந்த ஒழுங்குவிதிகள் மீறப்படும் பட்சத்தில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு ஆளாக நேரிடும்.

14. இங்கு குறிப்பிடப்படாத ஏதேனுமொரு விடயமிருப்பின்,அது பற்றி பாராளுமன்றத்தின் செயலாளர் நாயகத்தினால் தீர்மானிக்கப்படும். சலக விண்ணப்பதாரர்களும் இந்த வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள பொதுவான பரீட்சை ஒழுங்குவிதிகளுக்கு இயைந்தொழுக வேண்டும்.

15. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூலம் வெளியிடப்படும் இவ்வறிவித்தலில் மொழிகளுக்கு இடையில் ஏதேனும் முரண்பாடு அல்லது ஒவ்வாமை காணப்படுமாயின்சிங்கள மொழி மூலமான அறிவித்தல் மேலோங்கிநிற்கும்.

குஷானி ரோஹணதீர,
பாராளுமன்ற செயலாளர் நாயகம்.

இலங்கைப் பாராளுமன்றம்
ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே
2024, நவம்பர் 26.

மாதிரிவிண்ணப்பபடிவம்

(அலுவலகஉபயோகத்திற்காக)

**இலங்கைப் பாராளுமன்றத்தின் பாராளுமன்ற உத்தியோகத்தர் பதவிக்கு ஆட்சேர்த்துக் கொள்வதற்கான திறந்த போட்டிப்பரீட்சை - 2024**

**Open Competitive Examination for Recruitment to the Post of Parliamentary Officer in Parliament of Sri Lanka - 2024**

மொழிபெயர்ப்பு ஆற்றல் வினாத்தாளுக்கு தோற்றும்மொழிமூலம் :

ஆங்கிலம்/சிங்களம் - 2
ஆங்கிலம்/தமிழ் - 3
(கூட்டுக்குள் சரியான இலக்கத்தை எழுதுக)

1.0

1.1 முழுப்பெயர்: ..........................................................................
(ஆங்கில கெப்பிற்றல் எழுத்துக்களில்)

1.2 முழுப்பெயர்: ..........................................................................
(சிங்களத்தில் /தமிழில்)

2.0

2.1 நிரந்தரமுகவரி: ..........................................................................
(ஆங்கில கெப்பிற்றல் எழுத்துக்களில்)

2.2 அலுவலக முகவரி (இருப்பின்): ..........................................................................
(ஆங்கில கெப்பிற்றல் எழுத்துக்களில்)

2.3 அனுமதி அட்டை அனுப்பப்பட வேண்டிய முகவரி: ..........................................................................
(ஆங்கில கெப்பிற்றல் எழுத்துக்களில்)

3.0

3.1 பால் நிலை: ஆண்- 0 பெண்- 1
(ஏற்புடைய இலக்கத்தை கூட்டுக்குள் எழுதுக.)

3.2 தேசிய அடையாள அட்டை இலக்கம்:

3.3 கையடக்கத் தொலைபேசி இலக்கம்:

3.4 WhatsApp இலக்கம்:

3.5 மின்னஞ்சல் முகவரி: ........................................

3.6 பிறந்த திகதி: வருடம்: மாதம்: திகதி:

3.7 தகைமைகளை பூர்த்தி செய்யவேண்டிய திகதிற்கு வயது:

வருடம் : மாதம்: திகதி:

4.0 கல்வித் தகைமைகள்:

4.1 க.பொ.த. (சா/த) தகைமைகள்:

I. பரீட்சையின் வருடமும் மாதமும் : ..........................................................................

II. சுட்டிலக்கம் : ..........................................................................

III. பெறுபேறுகள் :

| பாடம் | தரம் | பாடம் | தரம் |
|---|---|---|---|
| 1. | | 6 | |
| 2. | | 7. | |
| 3. | | 8 | |
| 4. | | 9. | |
| 5. | | 10. | |

4.2 க.பொ.த (உ/த) தகைமைகள்:

I. பரீட்சையின் வருடமும் மாதமும் : ..........................................................

II. சுட்டிலக்கம் : ..........................................................................................

III. பெறுபேறுகள் :

| பாடம் | தரம் |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |

4.3 பட்டம் பற்றிய விபரம் :

(i) பட்டம் பெற்ற திகதி :..............................................................

(ii) பல்கலைக்கழகம்/நிறுவனம் :..............................................................

(iii) பட்டம் :..........................................................

(iv) பாடங்கள் :...........................................................

5.0 பிற தகைமைகள்: ..........................................................................................................................................................
..........................................................................................................................................................

6.0 நீங்கள் ஏதேனும் குற்றச்சாட்டுக்காக நீதிமன்றத்தினால் குற்றவாளியாக்கப்பட்டுள்ளீர்களா? [ (ஏற்புடையகூட்டில் (✓) அடையாளமிடுக) (ஆம் எனில் விபரங்களை குறிப்பிடுக)]

| ஆம் | இல்லை |
|---|---|
| | |

.........................................................................................

.........................................................................................

.........................................................................................

.........................................................................................

7.0 பரீட்சைக் செலுத்திய பற்றுச்சீட்டு பற்றிய விபரம்.

I. பணம் செலுத்தப்பட்ட அலுவலகம் : ..................................

II. பற்றுச்சீட்டு இலக்கமும் திகதியும் : ..................................

III. செலுத்தியதொகை : ..................................

| |
|---|
| பற்றுச்சீட்டை கழறாதவண்ணம் இங்கு ஒட்டவும்.<br>(பற்றுச்சீட்டின் பிரதியை பாதுகாப்பாக வைத்துக்கொள்வது பயனுள்ளதாகும்.) |

8.0 **விண்ணப்பதாரரின் சான்றுரை:**

(அ) இதில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் எனது அறிவுக்கும் மற்றும் நம்பிக்கைக்கும் எட்டிய வகையில் உண்மையானவை என வெளிப்படுத்துகின்றேன். இங்கு ஏதாவது பகுதிகள் பூர்த்திசெய்யப்படாமையால் மற்றும்/ அல்லது தவறாக பூர்த்தி செய்யப்பட்டமையால் ஏற்படக்கூடிய இழப்புகளை ஏற்க உடன்படுகின்றேன். மேலும் இதன் அனைத்துப் பகுதிகளையும் சரியாக பூர்த்தி செய்துள்ளேன் எனவும் வெளிப்படுத்துகின்றேன்.

(ஆ) என்னால் வெளிப்படுத்தப்பட்டுள்ள இந்த கூற்று பொய்யானதென கண்டறியப்பட்டால் நான் நியமிக்கப்படுவதற்கு முன்னர் தகைமையற்றவனாவேன் என்பதையும் நியமனம் பெற்ற பின்னர் சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கு ஆளாவேன் என்பதையும் நானறிவேன்.

(இ) மேலும் பரீட்சையை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் சம்பந்தமாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படுகின்ற சட்டவிதிகளுக்கு நான் கட்டுப்படுவேன் என்பதையும் வெளிப்படுத்துகிறேன்.

(ஈ) இங்கு குறிப்பிட்டுள்ள எந்தவொரு தகவலையும் பின்னர் மாற்றமாட்டேன்.

திகதி:............................ ......................................

விண்ணப்பதாரியின் கையொப்பம்

9.0 விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்துதல்:-

இந்த விண்ணப்பப்படிவத்தை சமர்ப்பிக்கின்ற திரு./திருமதி/செல்வி ................................................................................ என்பவரை நான்தனிப்பட்ட முறையில் நன்கு அறிவேன் எனவும், அவர் எனது முன்னிலையில்..................... ஆம் திகதி அவரது கையொப்பத்தை இட்டார் எனவும், உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி மேற்படி பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளது எனவும் உறுதிப்படுத்துகிறேன்.

...........................................................

திகதி :............................ கையொப்பத்தை உறுதிப்படுத்தும் அலுவலரின் கையொப்பம்

உறுதிப்படுத்தும் அலுவலரின் முழுப்பெயர் :......................................................................
பதவி:..........................................................................................................................
முகவரி:......................................................................................................................
(உத்தியோகபூர்வ முத்திரையால் உறுதிப்படுத்துக)

10.0 திணைக்கள /நிறுவனத் தலைவரின் சிபாரிசு (அரச நிறுவனங்களில்/மாகாண சேவையில்/கூட்டுத்தாபனங்களில், நியதிச் சட்ட சபைகளில் பணியாற்றும் விண்ணப்பதாரர்களுக்கும் மட்டும்)

பாராளுமன்ற செயலாளர் நாயகம்,

இந்த நிறுவனத்தில் ......................................................... பதவியை வகிக்கும் திரு./திருமதி/செல்வி ................................ ............................................ அவர்களின் விண்ணப்பத்தை சிபாரிசு செய்து சமர்ப்பிக்கின்றேன். இவர் உரிய பதவியில் நிரந்தரமாக்கப்பட்டுள்ளார் / நிரந்தரமாக்கப்படவில்லை என்றும், இவரின் வேலைகளும் நடத்தையும் திருப்திகரமானது என்றும், இவருக்கு எதிரான ஒழுக்காற்று நடவடிக்கைகள் ஏதுமில்லை என்றும், இவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் எதனையும் மேற்கொள்ளும் அபிப்பிராயமில்லை என்றும் நான் உறுதிசெய்கின்றேன். இவர் இந்தப்பதவிக்குத் தெரிவு

செய்யப்படுவாராயின், இவரை சேவையிலிருந்து விடுவிக்க முடியும் /முடியாது (தயவுசெய்து பொருத்தமற்ற வாசகங்களை நீக்கிவிடவும்).

திகதி: ................................ ..........................................................................................................

திணைக்கள /நிறுவனத் தலைவரின் கையொப்பம்

பெயர்:......................................................................

பதவி:........................................................................

(உத்தியோகபூர்வ முத்திரையை இட்டு சான்றுபடுத்துக)

11-379

---

## திருத்தம்

சுகாதார அமைச்சு

சுகாதார அமைச்சின் இலங்கை தொழில்நுட்ப சேவைக்குரிய மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்ப அல்லாத/ தொழில்நுட்ப சேவை வகையைச் சேர்ந்த (MN -03-2006-A) எலும்பியல் பட்டறை தொழில்நுட்பவியலாளர் (OrthopedicWorkshop Technician) பதவிக்கான ஆட்சேர்ப்பு (திறந்த)-2024

2024, மாச்சு 07 ஆந் திகதியன்று 2375 எனும் இலக்கமுடைய அரசாங்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட மேற்படி ஆட்சேர்ப்பு செய்வதற்கான அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்ப முடிவுத் திகதி பின்வருமாறு திருத்தப்படும்.

1. விண்ணப்ப முடிவுத் திகதி 2024.12.10 ஆந் திகதி வரை நீடிக்கப்படுவதுடன் மேற்படி வர்த்தமானி அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து பிற விடயங்களும் எந்த மாற்றமும் இன்றி அதில் உள்ளவாறே நடைமுறையில் இருக்கும்.

டாக்டர் பி.ஜி. மஹிபால,
செயலாளர்,
சுகாதார அமைச்சு.

சுகாதார அமைச்சு, ”சுவசிறிபாய”,
இல.385, வண. பத்தேகம விமலவன்ச தேரர் மாவத்தை,
கொழும்பு 10.

11- 300